ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 6 | மார்ச் 2001 | கானம் : 8

# மதுரமுரளி

Registered as Newspaper in India


Registrar of Newspapers for India Regd. No. TN/Chief PMG - 156
R. No. 62828/95 Licensed to Post without prepayment WPP No. 52

| வேணு : 6 | மார்ச் 2001 | கானம் : 8 |
| --- | --- | --- |


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

பழைய கூடலூர் திருக்கோவில்கள் கும்பாபிஷேகம் 4,5 பிப்ரவரி 2001





ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 6 மார்ச் 2001 கானம் : 8

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 64 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 46 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 34 | 10 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 40 | 13 |
| 7. | ஸ்ரீ குருவாயூரப்பன் - 3 | 15 |
| 8. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 67 | 18 |
| 9. | ஆமருவியப்பன் | 21 |
| 10. | ஸ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்த்ராள் - 4 | 24 |
| 11. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 31 |

## ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கானடா தாளம் : ஆதி

*பல்லவி*

***அழைக்கின்றான் கண்ணன் ஸ்ரீவனமே - குழலூதி***
***(அழைக்கின்றான்)***

*அனுபல்லவி*

***கேட்டிலையோ நீங்கள் மட்டிலா ஆனந்தமே***
***தட்டாமல் செல்வேன் தடைசொல்லாதீர் யாரும்***
***(அழைக்கின்றான்)***

*சரணம்*

***வண்ணமாலையும் உன்னத வடிவழகும்***
***என் சித்தத்தை மயக்குதடி***
***பட்டுத் திருமேனியை கட்டித் தழுவிடவே***
***உள்ளம் உருகுதடி-ஸகியே***
***எத்துணை சொல்லினும் புரியுமோ இவனழகு***
***என்னை பித்தனாக்கி பார்ப்பதே விளையாட்டு***
***(அழைக்கின்றான்)***

### *நாமாவளி*

**ஸ்ரீவனவாஸ கோவிந்த**
**ஸ்ரீ முரளீதர கோவிந்த**

# மதுரமான மஹனீயர் 64

குத்தாலம் அருகாமையில் உள்ள பழைய கூடலூரில், ஒரே ஸமயத்தில் ஸ்ரீ பாலகணபதி, ஸ்ரீ ஏகாம்ரேச்வரர், ஸ்ரீ லக்ஷ்மிநாராயண பெருமாள், ஸ்ரீ பாலசாஸ்தா ஆகிய நான்கு கோயில்களின் கும்பாபிஷேகமும், மும்பய் ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களால் நம்முடைய ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

கும்பாபிஷேக ஏற்பாடுகள் மிகவும் விமரிசையாக செய்யப்பட்டு இருந்தன. ஐந்து நாட்களும் வந்த அத்தனை ஜனங்களுக்கும் அன்னதானம் செய்யப்பட்டது. அந்த கிராமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் வஸ்திரங்கள் கொடுக்கப்பட்டன. பல பிரபலமான கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரளான ஜனங்களும் பல அதிகாரிகளும், அரசியல் பிரமுகர்களும், இந்த விழாவில் கலந்துகொண்டனர். இது போன்ற கும்பாபிஷேகத்தை தங்களுடைய ஆயுட்காலத்தில் பார்த்ததும் இல்லை. இனி பார்க்கப் போவதும் இல்லை என பலர் கூறினார்கள்.

கும்பாபிஷேகம் முடிந்து ஸ்ரீ ஸ்வாமிகள் டில்லி சென்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடன் பெங்களூர் ஸ்ரீ சங்கரநாராயணன் அவர்களும் உடன் சென்றிருந்தார்கள். ஹரித்வார் செல்லும் வழியில் 'சுகதாள்' (சுகர் பரிக்ஷித்திற்கு பாகவதம் சொன்ன இடத்திற்கு) ஸ்ரீ ஸ்வாமிகள் செல்ல அவா கொண்டார்கள். சுகதாள் போகும்பொழுது ஸ்ரீ சங்கரநாராயணன், ஸ்ரீ ஸ்வாமிகள் இந்த இடத்தில் கொஞ்சமாவது பாகவதம் சொல்லி நாம் கேட்டால் நன்றாக இருக்குமே என்று மனதில் நினைத்துக்கொண்டார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் அந்த இடம் சென்றவுடன் அங்கு இருந்த ஒருவரிடம் இருந்து ஸ்ரீமத் பாகவத க்ரந்தம் வாங்கி, பாகவத மாஹாத்மியமும், ஸ்ரீ க்ருஷ்ண ஜனனமும் உபன்யாஸம் செய்தார்கள். சங்கரநாராயணன் அவர்களுக்கு ஆச்சர்யத்தையும், ஸந்தோஷத்தையும் தந்தது. பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள், ஹரித்வார் சென்று கங்கையில் ஸ்நானம் செய்து மாலையில் கங்கை ஆரத்தியையும் தர்சனம் செய்தார்கள். மறுநாள், ரிஷிகேசம் சென்று சிவானந்தர் தங்கியிருந்த ஆனந்தகுடிர் எல்லாம் சென்றார்கள். பிறகு, நம் ஸ்வாமிகள் வசிஷ்டகுகைக்கும் சென்று அங்கு சுமார் ஒரு அரைமணி நேரம் தியானத்தில் இருந்தார்கள். மீண்டும் ப்ருந்தாவனம் வந்து சென்னை வந்து சேர்ந்தார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

உத்யோகத்தில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவர் சுவாமி சிவானந்தாவிடம் தனக்கு ஸந்யாஸம் வேண்டும் என்று கேட்டார். ஆனால் அதற்கு சுவாமி சிவானந்தா இசையாமல் மீண்டும் அவரை குடும்பத்தில் இருந்துகொண்டே பற்றற்று வாழச் சொன்னார். இதை கேட்ட அந்த முதியவரோ, ''தாங்கள் இளம் வயதுள்ளவர்களை எல்லாம் நிர்பந்தம் செய்து ஸந்யாஸம் கொடுத்துள்ளீர்கள். எனக்கு மட்டும் தர மறுப்பது ஏன்'' என்று கேட்டார்.

அதற்கு சிவானந்தாவோ, அப்பொழுது பூத்த புது மலர்களை தான் பகவானுக்கு அர்ப்பணம் செய்வார்களே அன்றி வாடி வதங்கின. மலர்களை அர்ப்பணம் செய்வதில்லை என்று கூறினார்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : புருஷன் செய்த பாபத்தில் மனைவிக்குப் பங்கு உண்டா?*

பதில் : சிஷ்யன் செய்த பாபம் குருவிற்கும், மக்கள் செய்த பாபம் அரசனுக்கும், குழந்தைகள் செய்த பாபம் பெற்றோர்களுக்கும், மனைவி செய்த பாபம் கணவனுக்கும் வரும். ஆனால் கணவன் செய்த பாபம் மனைவிக்கு வராது.

*கேள்வி : ஸாதாரணமாக நாம் பேச்சு வழக்கில் ஒருவர் வீட்டை குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது, அந்த வீடு மிகவும் லக்ஷ்மி கடாக்ஷமாக உள்ளது என்று கூறுகின்றோம். உண்மையில் மஹாலக்ஷ்மி எத்தகைய வீட்டில் வாசம் செய்வாள்?*


பதில் : ஸாதுஸேவை நடக்கும் வீட்டிலும், ஸதாசாரம் உள்ள வீட்டிலும், தான தர்மம் நடக்கும் வீட்டிலும், பசுஞ்சாணியால் மெழுகிய வீட்டிலும், துளசி செடி, வில்வசெடி உள்ள வீட்டிலும், ஸுமங்கலிகள் நிறைந்த வீட்டிலும், மாலையில் தீபம் ஏற்றப்படும் வீட்டிலும், வினயத்துடன் பழகுபவர்கள் வீட்டிலும், நாமஸங்கீர்த்தனம் நடக்கும் வீட்டிலும், வேதகோஷம் கேட்கும் வீட்டிலும், பிரேமையுடன் பழகுபவர்கள் வீட்டிலும், சண்டை சச்சரவு, அழுகை, கலகம், அசூயை, கோபம், பரஹிம்ஸை இவைகள் இல்லாத வீட்டிலும் லக்ஷ்மி வாஸம் செய்வதாக நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே இத்தகையவைகள் எல்லாம் எந்த வீட்டில் உள்ளனவோ அதுவே லக்ஷ்மிகடாக்ஷம் உள்ள வீடு ஆகும்.

*கேள்வி : ஸப்தரிஷிகள் என்று பொதுவாக சொல்லப்படுகின்றனரே. ஸப்தரிஷிகள் யார் யார்?*

பதில் : அத்ரி, ப்ருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், கச்யபர், ஆங்கீரஸர் என்னும் இவர்கள் ஸப்தரிஷிகள்.

*கேள்வி : புராணங்களில் ஸத்தியஸந்தனாக இருப்பவர்களைப் பற்றி வரும் கதைகளில் அவர்கள் சொன்னது சொன்னபடி நடக்கும் என வருகிறதே! இது உண்மையா?*

பதில் : Californiaவில் ஒரு நீதிபதி வாழ்ந்து வந்தார். மிக்க ஸத்தியஸந்தர். பொய்யே பேசமாட்டார். வழக்குகளில் பட்சமாக தீர்ப்பு அளிக்கமாட்டார். அவர் ஒருநாள் கோர்ட்டுக்கு வந்த பொழுது, கோர்ட்டில் அன்று அவருடைய உதவியாளர் யாரும் வரவில்லை. அவர் அதற்கு என்ன காரணம் என வினவியபொழுது, அவருடன் கூட வந்தவர் விசாரித்து, பிறகு சொன்னார். ''இன்று மழையாக உள்ளது. அதனால் யாவரும் வர தாமதமாகிறது'' என்று.



அந்த நேர்மையான நீதிபதி உடன் அன்று விளையாட்டாக, "I order the raingod to stop rain hereafter" என்று தீர்ப்புடன் சேர்ந்து எழுதினார். அன்றிலிருந்து பதினோரு வருடங்கள் மழையே California-வில் பெய்யவில்லை. எல்லோரும் அவரிடம் சென்று, நீங்கள் எழுதியதால்தான் இப்படி ஆயிற்று. மாற்றி எழுதுங்கள் என்றனர். மறுபடி அந்த நீதிபதி விளையாட்டாக "I am ordering the raingod to rain once more" என்று எழுதினார். அன்று மழை கொட்டித்தள்ளி விட்டது. ஆதலால், ஸத்தியம் யாரிடமிருந்தாலும், அவர்கள் சொல்வது பலிக்கும்.

# வேத கதைகள் - 46

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வெற்றியின் வழி

ஒரு ஸமயம், தேவர்களும் அரக்கர்களும் போர் புரிந்தனர். அந்த போரில் தேவர்கள் கிழக்கு திக்கில் வெற்றிக்காக முனைந்தனர். ஆனால் அந்த திக்கில் தேவர்களுக்கு முன்பாகவே அஸுரர்கள் வெற்றி அடைந்தனர். இவ்விதம் தெற்கு, மேற்கு, வடக்கு இந்த திக்குகளில் தேவர்களுக்கு முன்பாகவே அஸுரர்கள் வெற்றிப் பெற்றனர். வடகிழக்கு திக்கில் தேவர்கள் முனைந்தபொழுது தேவர்கள் வெற்றிப்பெற்றார்கள். ஆதலால் வடகிழக்கு திசையானது தோல்வி காணாதே என்று கூறப்படுகின்றது. ஆதலால் மனிதன் வடகிழக்கு திக்கில் எது செய்தாலும் அவனுக்கு வெற்றி கிடைக்கும்.

அப்பொழுது தேவர்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு ஆலோசனை செய்தனர். நமக்கு அரசன் இல்லாததால் கிழக்கு முதலிய திக்குகளில் தோல்வி ஏற்பட்டது. அரக்கர்களுக்கு வெற்றி கிட்டியது. ஆகையால் நமக்கு ஒரு அரசனை ஏற்படுத்திக் கொள்வோம் என்று தீர்மானித்து ஸோமனையே அரசனாக ஏற்படுத்தினர். இங்கு ஸோமம் என்ற பதத்தால் ஸோமலதையானது கூறப்படுகிறது. ஆதலால் ஸோமலதையை வைத்து யாகம் செய்பவன் எங்கும் வெற்றி அடைகிறான்.

ஸோமலதையை ஒரு வண்டியில் வைத்து எடுத்து வரவேண்டும். அந்த வண்டி கிழக்கு நோக்கி இருக்கும்பொழுது ருத்விக்குகள் ஸோமலதையை அதில் வைக்கின்றனர். வண்டி கிழக்கு நோக்கி இருப்பதால் யஜமானன் கிழக்கு திக்கில் வெற்றி அடைகின்றான். அந்த வண்டியை தெற்கு நோக்கி திருப்பினால் தென் திசையில் வெற்றிப்பெறுகின்றான். இவ்விதம் மேற்கு, வடக்கு திக்குகளில் வண்டியை திருப்பினால் அந்த திக்குகளில் வெற்றி கிடைக்கின்றது. கிழக்கு திக்கில் இந்திரன் இருக்கிறான். வண்டி

கிழக்கு நோக்கி இருந்தால் இந்திரன் அருளால் ராஜ்யத்தின் வளர்ச்சியை, யாகம் செய்பவன் அடைகிறான். இவ்விதம் வண்டி தெற்கு நோக்கினால், தெற்கு திக்கில் உள்ள யமன் அருளால் நீண்ட ஆயுளை அடைகிறான். எந்த யமன் ஆயுளை கவருகிறானோ! அவனிடமே நம்மை ஒப்படைத்து விடுகிறோம். ஆதலால் நம் ஆயுளை அவன் கவரமாட்டான். இதற்கு உதாரணமாக ஒரு கதை கூறப்படுகிறது.

விலை மதிப்பற்ற வைரங்களை வியாபாரம் செய்பவர்கள் ஆடம்பரமான உடையுடன் ப்ரயாணம் செய்யமாட்டார்கள். அவ்விதமே உயர்ந்த வகுப்புகளிலும், விமானங்களிலும் ப்ரயாணம் செய்யமாட்டார்கள். நாடோடிபோல் அழுக்கான உடையுடன் அழுக்கான பைகளில் வைரங்களை வைத்துக்கொண்டு ஏழைகள் போல் ப்ரயாணம் செய்வார்கள். அவரை வைர வியாபாரி என்று யாரும் எண்ண மாட்டார்கள்.

இவ்விதம் ஒரு வைர வியாபாரி கோடிக்கணக்கான மதிப்புள்ள வைரங்களை எடுத்துக்கொண்டு ப்ரயாணம் செய்யும் பொழுது திறமை மிகுந்த ஒரு திருடன் இவன் வைரவியாபாரி என்று அறிந்து அவனுடன் உறவாடி வைரங்களை திருட திட்டமிட்டான். முதலில் அந்த திருடன் வைர வியாபாரியுடன் ஸ்நேகம் செய்து கொண்டான். வைர வியாபாரி ப்ரயாணம் செய்யும்பொழுது இரவுகளில் உயர்ந்த லாட்ஜில் தங்கமாட்டான். சத்திரம் சாவடி என்ற ஜனநெருக்கம் உள்ள இடங்களில் தான் படுத்துக்கொள்வான். படுத்தவுடன் சிரமத்தால் உறங்கிவிடுவான். வைர வியாபாரி அவன் பையில் உள்ள வைரத்தை திருட திட்டமிட்டிருந்தான்.

வைர வியாபாரி பகலில் எந்த பையில் வைரங்கள் வைத்திருந்தானோ. அதே பையை இரவில் தலைமாட்டில் வைத்திருப்பான். திருடன் இரவில் அப்பையை சோதனை செய்யும் பொழுது ஒரு வைரம் கூட இருக்காது. ஆனால், பொழுது விடிந்தால் அதே பையில் ரத்னங்கள் இருக்கும். இவை கண்டு வியைப்படைந்த திருடன் ஒரு நாள், ''ஏ வியாபாரியே! இரவுகளில் வைரங்களை எங்கு ஒளித்து வைத்திருந்தாய்'' என்று கேட்டான். இதை கேட்டு ''ஓ முட்டாளே! நீ திருடன். வைரங்களை கவருவதற்காக நீ என்னுடன்

உறவாடுகிறாய் என்று தெரிந்துகொண்டு என் வைரங்களை உன் பையில் வைத்திருந்தேன். உன் பையில் வைத்திருந்ததால் வைரங்களை நீ திருட முடியவில்லை என்றான்''.

திருடன் இதைக் கேட்டு, என்னைக் காட்டிலும் இந்த வியாபாரி பெரிய திருடன், என்று வியந்து சென்றான்.

இந்தக் கதையில் கூறியபடி நம் ஆயுளை கவருகிற யமனிடமே நம்மை ஒப்படைத்துவிட்டால் யமனும் நம் உயிரை கவரமாட்டான். ஸோமலதையை வைத்திருக்கும் வண்டியானது மேற்கு திசையை நோக்கும்பொழுது மேற்கு திசையில் வருணன் அரசு புரிகிறான். வருணன் அருளால் பிள்ளை, வடக்கு திக்கில் உள்ள குபேரன் அருளால் தனம், தான்யம் இவைகள் ப்ராஹ்மணர்கள் அருளால் விரும்பியவையெல்லாம் நமக்கு கை கூடும். ப்ராஹ்மணர்களுக்கு அரசன் ஸோம ராஜா. ஆதலால் ஸோம லதையை வைத்து யாகம் செய்பவனுக்கு எங்கும் வெற்றிதான். ஸோம ராஜாவின் அருளால் நமக்கு எங்கும் வெற்றி கிடைத்து இன்பமுடன் வாழ்வோமாக!

---

*Pranams to the Lotus feet of Guruje*

**INTEROCEAN**
**Shipping AGENCY**

123, Angappa Naicken Street, Third Floor,
'HUSAINA MANZIL' Chennai - 600 001.

Phone : 5342500 / 5340360 • Fax : 5340053 • Tlx : 41-7482 IOSA IN
E-mail : inship@.vsnl.com • Website : http/ww.interocean.org.in

*Steamer Agents / Chartering Brokers / Trading Agents*

# எந்தரோ மஹானுபாவுலு - 34

நிமாயி கயாவை அடைந்து ப்ரஹ்ம குண்டத்தில் அனைவருடனும் ஸ்னானம் செய்து தேவ பித்ரு ஶ்ராத்தங்களை முடித்துக்கொண்டு விஷ்ணு பாத தரிசனத்துக்குச் சென்றார். அங்கு பண்டா உரத்த குரலில் விஷ்ணு பாதபத்ம மஹிமையை வர்ணித்துக் கொண்டிருந்தார்.

''இந்த பாதங்களிலிருந்துதான் ஜகத்பவானியும் முனி மனஹாரிணியுமான பாகீரதி உத்பத்தியானாள். இந்த பாதபத்மங்களைத்தான் லக்ஷ்மீதேவி ஶ்ரத்தையுடன் ஸேவிக்கிறாள். யோகிகள் தங்களது ஹ்ருதய கமலத்தில் நிரந்தரமாக இந்த கமல பாதங்களைத்தான் த்யானம் செய்கின்றனர். ப்ரபு, கயாஸுரனின் சிரஸில் வைத்து இந்த சரணங்களால்தான் அவனுக்கு ஸத்கதி அளித்தார்'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவரைச் சுற்றி பெரிய கூட்டமாக இருந்தது. பண்டாக்கள் தக்ஷிணை வைக்கச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

ஆனால், இந்தப் பெருங்கூட்டத்தில் நிமாயிக்கு பாதபத்ம மாஹாத்மியத்தைக் கேட்டதும் சரீர **பா**வமற்றுப் போயிற்று. உடல் கிடுகிடுவென நடுங்கியது. கண்ணீர் ஆறாகப் பெருகியது. முகத்தில் பேரொளி வீசிற்று. விஷ்ணுபாதத்தை நோக்கி ஓடினார். மூர்ச்சை அடைந்து கீழே விழும் நேரத்தில் திடீரென ஒரு ஸன்யாஸி அவரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார். உடனே அவருடன் வந்தவர்கள் நிமாயியை கூட்டத்திலிருந்து ஸமாளித்துக்கொண்டு வெளியே அழைத்துச் சென்றனர்.

மூர்ச்சை தெளிந்த உடன் உறங்கி விழித்தவர் போல் எழுந்து அங்குமிங்கும் பார்த்தார். ஒரு தேஜஸ்வியான ஸன்யாஸியைக் கண்டார். ஓடிச் சென்று அவரது சரணங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். இவரது ஸ்பர்ஶ மாத்திரத்தில் ஸன்யாஸி மூர்ச்சை அடைந்தார். இருவரும் சரீர **பா**வத்தை மறந்தனர். அந்த ஸன்யாஸிதான் ஸ்ரீமாதவேந்திரபுரியின் ப்ரதான சிஷ்யரான ஈச்வரபுரி. இவரைத்தான் நிமாயி நவத்வீபத்தில் தன் வீட்டிற்கு

பிக்ஷைக்கு அழைத்து தன்னை அங்கு ஆசை தீரப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார் என ஏற்கனவே நாம் படித்தோம்.

நிமாயி சிறிது நேரத்திற்குப் பிறகு ஈச்வரபுரியிடம், ''ப்ரபோ! எனது கயா யாத்திரை உங்களுடைய தர்சனத்தால் பூர்த்தியாயிற்று'' என்று கூறி விடைபெற்றார். அவர்கள் தங்கியிருந்த இடத்தை அடைந்து தங்களுக்கு உணவு தயாரித்துக்கொண்டிருந்த ஸமயத்தில் தூரத்தில் ஈச்வரபுரி வருவதைக் கவனித்து ஓடிச் சென்று அவரை இப்பொழுதும் பிக்ஷைக்கு அழைத்தார். ஈச்வரபுரி அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார். உணவுக்குப் பிறகு நிமாயி கைகூப்பிக்கொண்டு ஈச்வரபுரியிடம், ''ப்ரபோ! எனக்கு க்ருபையுடன் ஸ்ரீ க்ருஷ்ண பக்தியை அளியுங்கள்'' என வேண்டினார்.

புரிமஹாசய் நிமாயியிடம், ''நீங்களே ஸ்வயம் ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வரூபம்தானே! உங்களுக்கு நான் எப்படி பக்தியைத் தர முடியும். நீங்கள்தான் அனைத்து உலகுக்கும் ப்ரேமையை தர வேண்டும்'' என்றார். நிமாயி தீனமாக, ''ப்ரபோ! என்னை வஞ்சிக்காதீர்கள். தயவு செய்து எனக்கு க்ருஷ்ண மந்திரத்தை உபதேசியுங்கள்'' என்று ப்ரார்த்தித்தார். ''நீங்கள் சொல்வதால் நான் க்ருஷ்ண மந்திரத்தை உங்களுக்குத் தரலாம். ஆனால் எனக்கு அந்த யோக்யதை ஏது? உங்களைப் போன்ற மஹாபுருஷருக்கு மந்திரோபதேசம் செய்யும் தகுதி எனக்கு உண்டா?'' என்று ஈச்வரபுரி சொன்னார்.

ஆனால் நிமாயி விடாமல் கெஞ்சவே, ஈச்வரபுரி அவருக்கு ''உலகத்தை புண்ய ப்ரேம ஸாகரத்தில் மூழ்கடிக்கும் சக்திவாய்ந்த நீங்கள் இன்று எனக்கு குரு பதவி தந்து கௌரவிக்க வேண்டும் என்று ஆணையிடுகிறீர்கள். எனவே நானும் அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டு உங்களுக்கு மந்திர தீக்ஷை அளிக்கிறேன்'' என்று கூறி நிமாயியின் காதில் ''கோபீஜனவல்லபாய நம:'' என்ற தசாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார்.

மந்திரத்தை ச்ரவணம் செய்த மாத்திரத்தில் நிமாயி மூர்ச்சை அடைந்தார். நெடுநேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து சரீர ப்ரஜ்ஞை ஏற்பட்டது. ஆனால் நிமாயியிடம் விசித்திரமான ஸ்திதி உண்டாயிற்று. திடீரென்று உரக்க சிரித்தார். திடீரென்று ஹா க்ருஷ்ணா, ஹா பிதா என உரக்கக் கூறி கதறி அழுதார். நான் இப்போதே க்ருஷ்ணனிடம்

செல்ல வ்ரஜபூமிக்குச் போகிறேன் என்று ஓடினார். அவரைப் பிடித்து நிறுத்தினால் பைத்தியம் போல் உடலை உதறிக்கொண்டு கதறுவார்.

ப்ரியனே! என்னை விட்டு எங்கு சென்றாய். ஹா க்ருஷ்ணா!! என்று ஓலமிட்டு அழுவார். தனது ஸகாக்களிடம், நீங்கள் உங்கள் ஊருக்குச் செல்லுங்கள். நான் ப்ருந்தாவனம் சென்று வசிக்கப் போகிறேன் என்றார். இவரது இந்த அலௌகிக நிலைமையைக் கண்டு அவருடன் வந்தவர்கள் ஒன்றும் புரியாமல் தவித்தனர். அனைவரும் உறங்கும்பொழுது நடுநிசியில் அழுதுகொண்டே ப்ருந்தாவனத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

அப்பொது அவருக்கு ஒரு திவ்ய வாணி மூலமாக, ''நீ வ்ரஜ பூமிக்கு வரும் ஸமயம் இன்னும் வரவில்லை. உனது ஸத்ஸங்கத்தால் நவத்வீபத்து பக்தர்களுக்கு ஆனந்தம் அளித்துவிட்டு யோக்ய ஸமயத்தில் நீ வ்ரஜபூமிக்கு வரலாம்'' என்று ப்ரேரணை கேட்டது. அந்த குரலுக்குக் கட்டுப்பட்டு தனது கூடாரத்திற்குத் திரும்பினார் நிமாயி.

ஈச்வரபுரி, நிமாயிக்கு மந்திர தீக்ஷை அளித்துவிட்டு மறைந்துவிட்டார். ஜகத் பூஜ்யப்ரேமாவதாரமான நிமாயி லோக ரீதியாக தன்னை குரு என நினைத்து வணங்கிவிட்டால் தன்னால் தாங்கிக் கொள்ளமுடியாது என்று மறைவாகச் சென்றுவிட்டார்.

அடுத்த நாள் காலை நிமாயி எழுந்தவுடன், கூட வந்தவர்கள் அவரது உடை முழுவதும் கண்ணீரால் நனைந்திருப்பதைக் கண்டனர். எந்நேரமும் உடல்நிலை மறந்து க்ருஷ்ண விரஹத்தில் கதறி அழுதுகொண்டிருக்கும் நிமாயியை மிகவும் ஜாக்கிரதையாக ஒருவாறு ஸமாளித்துக்கொண்டு நவத்வீபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வரும் வழியில் குமார்ஹட் என்ற கிராமத்தை அடைந்ததும், இதுதான் என் குருநாதனின் ஜன்ம ஸ்தானம் என்று கூறி அந்த இடத்து மண்ணைத் தனது வஸ்திரத்தில் கட்டிக் கொண்டார். இந்த மண்ணில் என் குருநாதனின் பாதம் பதிந்து இருக்கும். இந்த மண் எனக்கு மிகவும் பவித்திரமானது. லக்ஷம் தீர்த்தங்களைவிட பாவனமானது என்று சொல்லிக்கொண்டார். இப்படி தனது சீடர்களுக்கு குருமஹிமையை ப்ரதர்சனம் செய்தார். பிறகு அனைவரும் நவத்வீபத்தை அடைந்தனர். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 40

ஸ்வாமி சிவானந்தர், மஹாத்மாக்கள் எத்தகையவர்கள் என்று சொல்லும்பொழுது பின்வரும் கதையை உதாரணமாக சொல்வது வழக்கம். முகலாய வம்சத்தில் வந்த பாதுஷா அக்பர் டெல்லியை ஆண்டு வந்தபொழுது ஒரு பெரும் விருந்து நடத்தினார். இதில் பலர் கலந்து கொண்டனர். ஆயிரமாயிரம் பேருக்கு ஏழை, பணக்காரர்கள் என்று வித்யாசமின்றி அனைவருக்கும் உணவளிக்கப்பட்டது.

அரண்மனையில் உணவருந்த ஒரு குழுவினர் அமர்ந்தனர். அதில் ஒருவரைத் தவிர, மற்ற அனைவரும், உரத்த குரலில் ''அக்பர் பாதுஷா வாழ்க'' என்று கோஷமிட்டனர். இதை மாடியின் முன்பகுதியில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த அக்பர், கோபமுற்று, அந்த கோஷமிடாத நபரை அழைத்துவரச் சொன்னார்.

அவர் பாதுஷாவை நெருங்கும் முன் அக்பர், ''அவனுக்கு உணவில்லை என்று சொல். 'அக்பர் பாதுஷா வாழ்க' என்று அனைவருடன் சேர்ந்து சொல்லாவிட்டால் அவன் அரண்மனையில் நுழைய இயலாது. அவனை வெளியே பிடித்துச் சென்று தள்ளுங்கள்'' என்று ஆணையிட்டார்.

பாதுஷாவின் ஆணை உடனே ஈவிரக்கமின்றி நிறை வேற்றப்பட்டது. அன்றிரவு அக்பர் உறக்கம் வராமல் தவித்தார். புரண்டு, புரண்டு படுத்தார். எங்கிருந்தோ ஒரு குரல் அப்பொழுது அக்பருக்கு கேட்கும் வண்ணம் ஒலித்தது. ''அக்பர்! நான் கடவுள். கோடிக்கணக்கானவர் என் புகழ் பாடுகின்றனர். மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், பரம ஏழை, மிகவும் தீயவன், என்னை ஏசுகிறவன், நான் இருப்பதையே நம்ப மறுப்பவன் ஆகியோருக்கும் கூட நான் மனமார வாழ்வளிக்கிறேன். எனது புகழ்பாடாத மனிதனுக்கும் நான் வாழ்வளிக்கிறேன் என்றால், உனது புகழ் பாடாத ஒரு மனிதனுக்கு உணவில்லை என்று நீ எப்படிச் சொல்லலாம்? அந்த மனிதன் ஒரு மாபெரும் ஞானி. எனது பக்தன். அவன் உனது புகழ் பாடத் தேவையில்லை. அவனுக்கு நீ உணவளித்தால், உன்னை நான் ஆசீர்வதிப்பேன்'' என்றது.

அக்பருக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்த குரலின் சப்தம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அந்த அறை முழுவதும் பரவி ஒலித்தவாறு இருந்தது. அக்பர் அது இறைவனின் குரலே என்று அடையாளம் கண்டுகொண்டார். காலையில் அந்த ஏழை மனிதனைத் தேடி ஆள் அனுப்பினார். அந்த மனிதர் வந்தபொழுது, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். தனது தவறை மன்னிக்குமாறு வேண்டினார்.

அந்த ஞானி, புன்முறுவலித்துக்கொண்டே, ''பாதுஷா! நீ மன்னிப்புக் கோர அவசியமில்லை. கடவுளுக்கு எப்படி தீமை செய்ய இயலும். அவரின் அடியவர்களை தீங்குக்கு ஆட்படுத்த இயலாது. தீங்கின் அச்சுறுத்தலிலிருந்து அவர்கள் விடுபட்டவர்கள். நீ அருள் பெற்றவன். அதனால்தான் உன் செயல் மூலம், இறைவனிடத்திருந்தே ஒரு போதனையைப் பெற உன்னால் முடிந்தது'' என்று கூறினார். அந்த ஞானி மேலும் அக்பரை வாழ்த்திச் சென்றுவிட்டார்.

பாலகர்களே! இப்பொழுது தெரிந்ததா. மஹான்கள் பணிவு குணம் படைத்தவர்கள் என்றும், அவர்களுக்கு தீங்கிழைக்க முடியாது என்றும், அவர்கள் இறைவனுடன் மிக்க நெருங்கியவர்கள் என்றும் தெரிந்து கொண்டோமல்லவா?

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### மார்ச் 5-ந் தேதி முதல் மார்ச் 11-ந் தேதி வரை

சேலம், மிலிடரி ரோடு, ஸ்ரீ க்ருஷ்ணா ஆஶ்ரமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின், பக்த விஜயம் - ஸப்தாஹம் உபன்யாஸம் இரவு 7 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும்.

பஸ் நிறுத்தம் : பொன்னம்மாப்பேட்டை கேட்

நகரப் பேருந்து எண் : 4, 14, 17, 32, 54, 74, 32

# ஸ்ரீ குருவாயூரப்பன் - 3

ஜனமேஜயனின் ப்ரார்த்தனைக்கிணங்கி தத்தாத்ரேயரும் உடன் வந்தார். இருவரும் குருவாயூர் க்ஷேத்ரத்தை அடைந்தனர். அங்கு கிழக்கேயுள்ள ஒரு அஶ்வத்த மரத்தைக் காட்டி, தத்தாத்ரேயர் அதன் மஹிமையை வர்ணிக்கலானார்.

ஒரு ஸமயம், மஞ்ஜுளா என்னும் ஒரு நாரீமணி பல புண்ணிய கர்மாக்களைச் செய்து இந்த திவ்யதேசத்தை அடைந்தாள். பகவான் பாலகோபாலன் தன்னுடன் லீலை செய்யவேண்டும் என்று பல்லாண்டு காலம் தவம் கிடந்தாள். பக்த பராதீனனான பகவான் தினமும், கோவிலிலிருந்து வெளியே வந்து அவளுக்கு ப்ரத்யக்ஷமாகி அவள் விரும்பியபடி அவளுடன் லீலை செய்து வந்தான். இவ்வாறு பலகாலம் நடந்து வந்தது. எண்ணிறந்த பக்த கோடிகளை ஆகர்ஷிக்கும் ஆநந்த மூர்த்தியான கோபாலக்ருஷ்ணன் பக்தியில் முதிர்ந்த ஒரு சிலரையும் ஆட்கொள்ள எண்ணம் கொண்டார். அவர்களுக்கு அரச மரத்தடியே, மஞ்ஜுளாவின் மனோரதத்தை பூர்த்தி செய்யும் மோஹன ஸுந்தரன் தர்சனம் தந்தார்.

இதை அறிந்த பெண்ணரசி க்ருஷ்ணனது லீலா விக்ரஹத்தில் ஒருவர் கண்ணிலும் காணாதபடி ஒன்றிவிட்டாள். மஞ்ஜுளா பகவானுடன் கலந்த பிறகு பகவானும் மறைந்தான். ஆதலால் அந்த இடமானது மிகப்பாவனமான இடமாக வணங்கி வரப்படுகிறது. இன்றும் பக்தர்கள் பக்தியுடன் அங்கு உற்று நோக்கினால் பாலகோபாலன் ஊனக் கண்ணிற்கும்கூட புலனாவான். இங்ஙனம் தத்தாத்ரேயர் ஜனமேஜயனுக்கு அந்த புண்ணிய வ்ருக்ஷத்தைப் பற்றிக் கூற அதை ஜனமேஜயன் வலம் வந்து வணங்கினான். பிறகு இருவரும் கோவிலுள்ளே சென்றார்கள்.

### ஸ்ரீ க்ருஷ்ண தரிசனம்

இருவரும் கோவிலில் உள்ளே வந்தவுடன், கோடி ஸூர்ய ப்ரகாஶமான ஒரு ஒளி பளீரென்று ப்ரகாசித்தது. அந்த ஒளியினிடையில் சந்த்ர பிம்பம் போன்ற முகம். முத்து முத்தாகப்

பல்வரிசை, செண்பகம் போன்ற நாஸி, தாமரைப்போன்ற கண்கள், அகன்ற நெற்றி, அதில் கோபீ சந்தனம், சுருள்சுருளான கேசங்கள், நவரத்ன ஒளிவீசும் கிரீடம் சிரத்தினிலே. கண்ணாடி போன்ற இரு கன்னங்களிலும் பளபளவென அசையும் நவரத்ன குண்டலங்களின் காந்தி. அகன்ற வக்ஷஸ்தலம், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், வைஜயந்திமாலை, ஶங்கம், சக்ரம், கதை, பதமம் இவைகளை ஏந்திய நான்கு கைகள். இடையில் திவ்ய மஞ்சள் பீதாம்பரம், அதன்மீது அழகிய ஒட்டியானம். கலகலவென ஓங்காரத்தை ஒலிக்கும் நூபுரம் அணிந்த இரு சரண கமலங்கள். அதில் அரும்பரும்பாய் நகங்கள்.

ஜனமேஜயனும் தத்தாத்ரேயரும் ஜகன்மோஹனகரமான திவ்ய மங்கள மூர்த்தியை கண்டவுடன் பரவசமடைந்தார்கள். அடியற்ற மரம்போல் வீழ்ந்தார்கள். சிரத்தின் மீது கரத்தைக் குவித்துப் போற்றினார்கள். ஆநந்த தாண்டவம் ஆடினார்கள். அவர்களுக்கு அவ்விடம் விட்டுச் செல்ல மனம் வரவில்லை. எனினும் அங்கிருந்துப் புறப்பட்டு மம்மியூர் என்னும் அம்பிகாபரம் சென்றடைந்தனர். மம்மியூரப்பனான சிவனை தரிசித்து பூஜித்தனர். க்ருஷ்ண தர்சனம் இவர்களை மீண்டும் இழுக்க மறுபடியும் குருவாயூரப்பனிடம் வந்தனர். பேரானந்தம் அடைந்தனர். இவ்வரிய ஆனந்தமடைய காரணமான தத்தாத்ரேய குருவை ஜநமேஜயன் வாயார புகழ்ந்து போற்றினான்.

''ஹே ஸத்குரோ! எனக்கு இந்த ப்ரஹ்மானந்தத்தைக் காட்டி ஊட்டிய உமக்கு ஈரேழு உலகும் ஈடாகுமா?'' என்று பலமுறை வணங்கி கொண்டாடினான். உண்மை பக்தனான ஜனமேஜயனுக்கு தத்தாத்ரேயர் ஸ்ரீ க்ருஷ்ண ஸேவை முறையை விளக்கிக் கூற ஆரம்பித்தார்.

''ஹே ஜனமேஜய! ஸத்குலத்தில் உதித்த உனக்கு தெய்வபக்தியும் குருபக்தியும் இருநாடிகள் போலுள்ளன. இங்கு நாற்பது நாட்கள் தங்கி இரவு நான்காவது யாமத்தில் (அதாவது ப்ரஹ்ம முகூர்த்தத்தில்) எழுந்து க்ருஷ்ணனை ஸ்மரிப்பாயாக. அவன் நாமாவை வாயார கூறுவாய். புண்ய தடாகத்தில் நீராடி பகவானது நிர்மால்ய தர்சனம் செய்வாய்.

பகவானுக்கு செய்யும் தைலாபிஷேகம் தர்சனம் செய்து தைல ப்ரஸாதம் ஒற்று சிரசில் தரித்துக்கொள். தினமும் காலையில் நிர்மால்ய தர்சனம், இருமுறை அபிஷேக தர்சனம், ஐந்து முறை பூஜா தர்சனம், மூன்று முறை பகவானை ப்ரதக்ஷிணமாக வரும் ஸ்ரீ வேலி தர்சனம், தூபதர்சனம் என்று பண்ணிரண்டு முறை தர்சனங்களைச் செய்வாய். மம்மியூர் சிவனையும் மறவாமல் ஸ்மரித்து வருவாய்'' என்று உபதேஸித்துவிட்டு தத்தகுரு விடைபெற்றுச் சென்றார்.

குருநாதர் கூறியபடி ஜனமேஜயன் பக்தியுடன் ஒரு மண்டலம் பகவானைப் பூஜித்தான். ஒரு மண்டலம் பூஜித்து வந்த கடைசி நாளில் இரவு முடிந்து அதிகாலையில் எழுந்திருக்கும் முன்பு ஒரு கனவு கண்டான். அதில் ஸ்ரீ குருவாயூரப்பன் ஜனமேஜயனிடம் பேசினார். ''ஹே பக்த ஶ்ரேஷ்டா! நீ இப்பிறப்பில் செய்த பாவம் இந்த பிறப்பினுடேயே முடிந்துவிட வேண்டும் என்பதற்காக தொழு நோயைக் கொடுத்தேன். நோயின் கொடுமைதான் நீ என்னிடம் வரச் செய்தது. உனது பக்திக்கு மகிழ்ந்தோம். உனக்கு இன்றுடன் நோயகன்றது'' என்று கூறி பகவான் தனது திருக்கரத்தால் மும்முறை ஜனமேஜயனின் உடலைத் தடவினார்.

இந்த கனவு கண்டவுடன் எழுந்தான் ஜனமேஜயன். தன்னுடலிலிருந்த பெரு நோய், வடு கூட இல்லாமல் மறைந்ததைக் கண்டு மகிழ்ச்சி கொண்டான். மேலும் பக்தி செய்யத் தொடங்கினான். அந்தணருக்கு அன்னதானம், கோதானம், பூதானம், ஸ்வர்ணதானம், வஸ்த்ரதானம் முதலியன வழங்கினான். குருவாயூரை விட்டுப் பிரிய மனமில்லாமல் அஸ்தினாபுரம் சென்றான். ஜனங்கள் மன்னரை வரவேற்றனர். குருவாயூரப்பனை தினமும் ஸ்மரித்து புகழ்பாடி ப்ரதிக்ஷணமும் அவன் ரூபத்தில் மனதை செலுத்தி வந்தான் ஜனமேஜயன்.

- தொடரும்

Our Website has been re-organised. Visit us at http://www.madhuramurali.org to know more about mission activities and satsang events.

The Spiritual Magazine "Madhura Murali" is also available on Web.

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 67

*சோம்பியாய் சும்மா சுகமுண்டு உறங்கிடிற்*
*சொல்வேன் என்கதி அருணாசலா* - தொடர்ச்சி

சோம்பேறி, யாதொரு காரியமும் செய்யாது வீணாக காலம் கழித்த வண்ணமிருப்பான். ஞானியும் பார்ப்பதற்கு அப்படி இருப்பான். ஆனால், உண்மையில் ஞானி அப்படி இல்லை. சாதாரணமான லௌகீக சோம்பேறி உலகில் நடக்கும் விஷயங்களைப் பற்றி கவலைப்படாது, பரவாழ்க்கைக்கும் ஆசைப்படாது, எதற்காகவாவதும் ப்ரயத்தனமும் படாது வாழ்ந்து கொண்டிருப்பான். ஞானிக்கு இந்த உலகில் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. பரத்திலும் அவ்வாறே. அதனாலே அவர்களைப் பற்றி சொல்லும்பொழுது, ''சும்மா இருக்கும் சுகமே சுகம்'' என்கின்றனர்.

சோம்பேறிக்கு மனதில் சஞ்சலங்கள் உண்டு. ஞானிக்கு மனது என்பதே இல்லை. சோம்பேறி, காரியம் செய்வதில்லை. ஆனால், ஞானியோ உலகில் நடக்கும் காரியங்கள் அனைத்துக்கும் அவனே காரணம். ஏனெனில் அவன் ஸகல ஜீவராசிகளிலும் இருக்கிறான். அவன் ஸர்வ வ்யாபி.


சரீரத்தை ஒருவராலும் சும்மா வைத்துக்கொண்டு இருக்க முடியாது. தியானம் செய்ய முயலும் ஒருவர் சிறிது நேரம் தியானம் செய்கிறார். பிறகு அவருக்கு ஒரு புத்தகத்தைப் பற்றி ஞாபகம் வருகிறது. உடன் அதை படிக்கலாமா என எண்ணுகிறார். இப்படி மனம் ப்ரவிருத்திக்க ஆரம்பித்தவுடன், மற்ற விஷயங்களிலும் மனது ப்ரவிருத்திக்கிறது. ஜன்னல் வழியாக வெளியே பார்க்கலாமா என்று தோன்றுகிறது. சாப்பிடலாமா என்று நினைக்கிறார். இப்படி மனம் சஞ்சலப்படுவதால் அவரது சரீரத்தை அவரால் சலிக்காது வைக்க முடியாது. மனது சலித்தால்தான் சரீரமும் சலிக்கும்.

அதனால்தான் ராஜயோகத்தில் சொல்லும்பொழுது, ஆஸன ஸித்தியை முதலில் பழகச் சொல்கின்றனர். மனது சலித்தால் சரீரம் சலிக்கும். மனது அடங்கினால் சரீரம் அடங்கும். திருப்பிப் போட்டால், சரீரம் அசையாது இருந்தால் மனதும் ஆடாது அடங்கும். ஒரு ரதம் இருக்கிறது. அந்த ரதம் ஓடினால், அதிலிருக்கும் சரங்களும், கட்டியுள்ள துணியும் அசையுமல்லவா? அது போலத்தான் இதுவும். ஆஸனம் ஸித்தியானால் மனது அடங்கும்.

ஆதலால் சும்மா இருப்பது என்பது அத்தனை சுலபமான காரியமில்லை. ஒரு கோவிலில் பட்டைசாதம் கொடுத்து வந்தனர். அங்கு இருக்கும் பூ கட்டுகிறவர், நாதஸ்வரம் வாசிப்பவர், கணக்கு எழுதுபவர், அர்ச்சகர் என்று அனைவருக்கும் ஒவ்வொரு அளவு உண்டு. அதன்படி அவர்களுக்கு பட்டைசாதத்தைப் பகிர்ந்து கொடுப்பர். அந்தக் கோவிலில் ஒரு சாது வாழ்ந்து வந்தார். அவர் ஒரு மஹான். ஆதலின் நித்யம் ஜப, தியானங்களில் ஈடுபட்டு இருப்பார். அவருக்கும் ஒரு பட்டைசாதம் கொடுத்து வந்தனர். ராஜாவிடம் ஒரு முறை இந்த கணக்கை எல்லாம் கோயில் கணக்குகளைக் காண்பிக்கும்பொழுது காண்பித்தனர்.

''குருக்களுக்கு இவ்வளவு, நாதஸ்வரம் வாசிப்பவருக்கு இவ்வளவு, கட்டிட வேலை செய்பவருக்கு இவ்வளவு என்பது எல்லாம் சரி. ஆனால் அந்த சாமியாருக்கு எதற்கு? அவர் கோவிலுக்கு எந்த விதத்தில் உபயோகமாக இருக்கிறார்'' என்றார் ராஜா. வந்திருந்தவர் சொன்னார், ''அவர் ஒரு மஹான், அவர் சும்மாதான் இருப்பார். கோயில் காரியம் எதுவும் செய்யார்'' என்றார். உடனே ராஜா சொன்னான், ''கோயிலுக்கு உபியோகமில்லாதவருக்கு பட்டை சாதம் கொடுக்க வேண்டாம்'' என்று ஆணையிட்டான்.

மந்திரி உடனே குறுக்கிட்டு, ''இல்லை ராஜா! சும்மா இருப்பது மிகக் கடினம். ஆதலால் அவருக்குக் கட்டாயம் கொடுக்க வேணும்'' என்றார். மந்திரி சொல்கிறாரே என்று ராஜாவும் அப்பொழுதுக்கு அதை விட்டு மந்திரி சொல்வதை சோதிக்க முடிவு செய்தார். அடுத்த நாள் முழுவதும் தான் சும்மா இருக்கவே முயற்சி செய்தான். பத்து நிமிடம் கூட அவனால் சும்மா இருக்க முடியவில்லை.



கோயிலுக்கு வந்து உடன் ஆணை பிறப்பித்தான், ''மந்திரி சொல்வது சரி. அவருக்கு (அந்த மஹானுக்கு) ஒரு பட்டைக்கு பதிலாக இனி இரண்டு பட்டை சாதமாக கொடுக்க வேணும்'' என்றார். சும்மா இருப்பது அவ்வளவு கடினம்.

ஞானி இருக்கும் நிலை ஜாக்ரத், ஸ்வப்ன, சுஷுப்தி எனப்படும் விழிப்பு, கனவு, தூக்க நிலை மூன்றையும் கடந்த துரியநிலை ஆகும். அதைத்தான் தூங்காமல் தூங்கி என்கின்றனர். ஒரு பெரிய மஹானிருந்தார். அவர் தியானம் செய்து சித்தி அடைந்தார். தனது அனுபவத்தை அவர் எழுதும்பொழுது, ''நான் தூக்கத்திற்கு தூக்கம் கொடுத்துவிட்டேன்'' என்று எழுதினார். ஞானி இருக்கும் அத்தகைய நிலையில் பேரானந்தம் உள்ளது. தெய்வத்திற்கு கூட இல்லாத ஆனந்தம் ஞானிகளுக்குள்ளே இருக்கிறது. இந்த மாதிரி நிலைகளை எல்லாம் கேட்பதற்கே ஆசையாக இருக்கிறதே! அருணாசலா! அந்த ஸ்திதியை எனக்கு அனுக்ரஹம் செய் என்கிறார் ரமண பகவான்.

(தொடரும்)

# ஆமருவியப்பன்

உபரிசரவஸி என்ற அரசன் பரம விஷ்ணு பக்தன். வைஷ்ணவ தர்மத்தின்படி நடந்து உலகை ஆண்டு வந்தான். அவன் விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்தியுடையவன். யஜ்ஞஸ்வரூபமான பகவானை அவன் புரோடாச யாகத்தினால் ஆராதித்தான். அவனுடைய பக்திக்கு வசப்பட்டு ஸர்வேச்வரனான பகவான் சங்க சக்ர கதாதரராக யஜ்ஞாக்னியில் ஆவிர்பவித்து, அந்த அரசனுக்கு தர்சனம் தந்தார். அந்த காட்சியைக் கண்டு பரவசமடைந்து, அரசன் பலவாறாக பகவானை துதி செய்யலானான்.

அந்த யஜ்ஞத்திற்கு வந்த முனிவர்களும், வேத ப்ராஹ்மணர்களும் அரசனைப் பார்த்து தாங்கள் சொல்வதை நாங்கள் நம்புவதற்கில்லை. வேதம் அறிந்த எங்களுக்கும், மனதை அடக்கி தவம் இயற்றும் முனிவர்களுக்கும் தெரியாமல், பகவான் எப்படி உங்களுக்கு மட்டும் தெரியக்கூடும். ஒன்று தாங்கள் பொய் சொல்கிறீர்கள், அல்லது உங்களுக்கு ஏதாவது சித்தபிரமை ஏற்பட்டிருக்கக்கூடும் என்று பலவாறாக கூறினார்கள். பகவான் அந்த முனிவர்களுக்கும், வேத ப்ராஹ்மணர்களுக்கும் தர்சனம் தராமல் ஆனால் அவர்கள் காதில் விழுமாறு பேசலானார்.

''நான் ஸாங்க்யத்தினாலோ யோகத்தினாலோ, தபஸினாலோ, விரதத்தினாலோ, வைதீக கர்மாக்களினாலோ கிடைக்கக் கூடியவனில்லை. நான் பக்தி ஒன்றுக்கே வசப்படக்கூடியவன். உலகத்தில் அவரவர்கள் செய்யும் நல்ல கார்யங்களுக்கு பலனுண்டு. ஆனால் என்னுடைய தர்சனம் என்னுடைய பக்தர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியது. தங்களுக்கெல்லாம் அத்தகைய பக்தி இல்லை. ஆனால் இந்த அரசனோ என்னுடைய சிறந்த பக்தன். ஆகவே அவனுக்கு என்னுடைய தர்சனம் கிடைத்தது. தங்களுக்கு அத்தகைய பக்தி இல்லாததால் என்னுடைய தர்சனம் கிடைக்கவில்லை'' என்று பகவான் கூறி மறைந்துவிட்டார்.

இதைக்கேட்டு எல்லோரும் அரசனைப் புகழ்ந்தனர். யாக பூர்த்தியில் எல்லா தேவர்களின் தர்சனமும் அரசனுக்குக் கிடைத்தது. ஆகாயத்தில் செல்லக்கூடிய ஒரு விமானத்தையும் அரசனுக்குத் தந்தனர். அந்த விமானத்தில் ஏறிக்கொண்டு அரசன் எங்கும் சென்று வரலாயினார். விஷ்ணுவின் அருளால், எங்கு சென்றாலும் வெற்றியும் பெற்று வந்தார். இப்படியாக ஒரு ஸமயம் அரசன் ஆகாயத்தில் விமானத்தில் சென்று கொண்டிருக்கையில், விமானத்தின் கதி தடைப்பட்டது. அரசன் ஆச்சர்யமடைந்தான். கீழே இறங்கி பார்க்கையில் ஆமருவியப்பனை தர்சனம் செய்தான்.

ஆநிரை மேய்ப்பவனும், சியாமள வர்ணனும், தாமரைப் போன்ற கண்கள் உடையவனும், ஸுராஸுரர்களால் ஸேவிக்கப்படுபவரும், காவேரி தீரத்தில் ஸஞ்சரிப்பவனுமான கோபாலனைக் கண்டு அரசன் அடிபணிந்து கோபாலன் யமுனாதீரத்தை விட்டு காவேரி தீரத்தில் ஆயர்கோல தோற்றத்தில் நிற்பதின் காரணம் என்ன? என்று வினவினான். அதற்கு பகவான் பின்வருமாறு கூறலானான்.

''ஒரு ஸமயம் கைலாயத்தில் பரமேச்வரன் என்னை கோபாலனாக பார்க்க விரும்பி தவம் செய்தார். பத்மாஸனத்தில் அமர்ந்து கண்களை மூடி தவம் செய்த பரமேச்வரனுடைய கண்களை வேடிக்கையாக பரிஹாஸப் பேச்சுடன் உமாதேவி பின்புறமாக வந்து தனது கைகளால் பொத்தினாள். அதனால் பரமகோபத்தை அடைந்து ருத்ரன் தேவியைப் பார்த்து, நீயோ விஷ்ணுமாயை, ஞானமில்லாத பசு, ஆகவே பசுவாக ஆவாய். கோவிந்தனின் க்ருபையால் மீண்டும் என்னை அடைவாய் என்று சபித்துவிட்டார்.

இவ்வாறு சாபமடைந்த தேவி பசுவாக மாறி காவேரி தீரத்திலேயே அமர்ந்து கொண்டிருந்தாள். உடனே நான் கோபாலனாகி மாடு மேய்க்க வந்துவிட்டேன். என்னுடைய ஸகோதரியாகிய பசுவை நான் மேய்க்கும் காட்சியை பார்க்கவேண்டி சிவனும் இங்கு வந்து என்னைப் பார்த்து சந்தோஷமடைந்தார். சாபம் நீங்கப் பெற்ற தேவியை அழைத்துக் கொண்டு கைலாயம் சென்றார். அரசே

உனக்கும் என் தர்சனத்தைத் தந்து நான் இங்கு வந்த காரணத்தையும் சொல்லிவிட்டேன். சூர்ய சந்திரர்கள் உள்ளவரை இந்த என்னுடைய அர்ச்சாவதார திருமேனியிலேயே காட்சி தருவேன். இங்கு என்னுடைய ஆலயத்தை ஏற்படுத்தி உத்ஸவங்கள் நடத்திவர ஏற்பாடு செய்'' என்று பகவான் அரசனுக்கு கட்டளையிட்டார்.

அது போலவே அரசனும் செய்து பரமாநந்தமடைந்தார். இந்த கோபாலன் என்ற ஆமருவியப்பனை யார் யார் பக்தியுடன் பூஜை செய்து வருகின்றார்களோ அவர்களுக்கு உலகத்தில் எந்த இடத்திலும் எப்பொழுதும், யாராலும் தோல்வி என்பதே கிடையாது. இந்த க்ஷேத்திரத்தின் பெயர் தேரழுந்தூர் ஆகும்.

---

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவம்**

இடம் : **ஸ்ரீ ரகுநாதாஶ்ரமம்**
ஸ்ரீ ராதாநிவாஸ்
ப்ருந்தாவன் - 281 121
மதுரா (U.P.)

தேதி : மார்ச் 18-ந் தேதி முதல் மார்ச் 25ந் தேதி வரை

---

| | |
|---|---|
| முன் அட்டைப்படம் : (வெளியே) | திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத் குமார். |
| முன் அட்டைப்படம் : (உள்ளே இடது) | ஸமீபத்தில், பழைய கூடலூர் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண பெருமாள் கோவில், ஸ்ரீ ஸ்வாமிகள் திருக்கரங்களினால் ஸம்ப்ரோக்ஷணம் செய்விக்கப்பட்டது. |
| முன் அட்டைப்படம் : (உள்ளே வலது) | தர்மாத்மா மும்பை G.K. ராமமூர்த்தி அவர்களால் கைங்கர்யம் செய்யப்பட்ட பழைய கூடலூர் திருக்கோவில்கள் ஸம்ப்ரோக்ஷணத்தை காண வந்த பக்ததிரளில் ஒரு பகுதி. |

# ஸதாஶிவ ப்ரும்மேந்திராள் - 4

ப்ரும்மேந்திரர், தலையில் நாள்பட்ட ஜடை இருக்கும். மேலும் அவர் திகம்பரர். ஸ்நான பானாதிகளோ கிடையாது. எப்பொழுது என்ன செய்வார், எங்கு இருப்பார் என்று ஒரு நியமமில்லாத பித்தர் போலிருப்பவர். லோகத்தில் ஸஞ்சரித்தாலும், ஸதா நிஷ்டையில் இருப்பவர். ஸர்வ வல்லமை இருந்தாலும், எளியவனுக்கும் பணிந்து கொடுப்பவர். வீடு, வாசல் என்று எதையும் தனதிடமாகக் கொள்ளாது, ஜனங்கள் மத்தியில் இருந்தாலும், ஒதுங்கியே இருப்பவர். உலகில் பரமசிவன் மாறுவேஷம் அணிந்து ஸஞ்சரித்தானோ என்பது போல் இவர் இருந்தார். ஏனெனில் பரமசிவனுக்கான மற்ற புற அடையாளங்களான மான், மழு, கங்கை, பாம்பு, கபாலம், தீ ஆகியவை இவரிடம் இல்லை அன்றோ?

கணபதி ஔவையாருக்கு மூப்பு கொடுத்தது, (குமரி, குமரன் ஆன சரித்திரங்கள் பல. ஆனால் இது வித்யாசம்.) தேவர்கள் கண்டு நடுங்கிய விஷத்தை சுந்தரர் நெல்லிக்கனி போல் திரட்டி கொணர, பரமசிவன் அதை உண்டு நீலகண்டன் ஆனது, ஒரு பழத்தின் பொருட்டு சுப்ரமணியன், ஈசனைப் பிரிந்து பழனிக்குச் சென்றது, மானிட சிசுவுக்கு பார்வதி பால் அளித்தது, நொடியில் ராவணனை ஸம்ஹரிக்க சக்தி இருந்தும் சீதை பொறுமையாயிருந்தது, ஹனுமார் இலங்கை முழுவதும் தனது வால் கொண்டே எரித்தது, வாமனர் ஓரடியில் அளக்க வலிமை இருந்தும், மூவடி கொண்டு உலகளந்தது, த்ரௌபதிக்கு கண்ணன் அருகில் இல்லாமலிருந்தும் வஸ்திரமளித்தது, அதைக் கண்டும் துரியோதனனுக்கு புத்தி வராதிருந்தது, ஸர்வ வ்யாபியாயிருப்பினும் கண்ணன் உண்ட கீரை துர்வாஸரையும் அவர் சீடரை மட்டும் த்ருப்திபடுத்தியது என பகவத் சரித்திரங்கள் ஆச்சரியமும், அதிசயமும், வியப்பில் ஆழ்த்தும் வகையாகவும் இருக்கின்றன. உத்தமமான மஹாத்மாக்களின் சரித்திரங்கள் இத்தகைய ஸம்பவங்கள் அடங்கியவையே. ப்ரும்மேந்திராள் சரித்திரமும் அத்தகையதே.

ஒரு முறை காவேரி கரை ஓரம் ப்ரும்மேந்திரர் தவத்தில் ஆழ்ந்திருந்தார். காவேரியில் சிலகாலம் கழிந்தபின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. நமது மௌனஸ்வாமிகளுக்கு நிஷ்டை கலையவில்லை. இவரும் ஜலத்தில் அடித்துச் செல்லப்பட்டார். காவேரி அவரை கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருவிசநல்லூர் கிராமத்திற்கு அடித்துச் சென்றாள். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவருக்கு மரணம் வரவில்லை. ஸமாதியும் கலையவில்லை. புராண காலங்களில் கூட இப்படி இருந்தவர்கள் குறைவு எனலாம்.

அவ்வூரில் முன்னர் கண்டபடியே, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் வாழ்ந்து வந்தார். அருகிலுள்ள கோவிந்தபுரத்தில் ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் வாழ்ந்து வந்தார். ப்ரும்மேந்திராளைக் கண்ட ஊர்மக்கள் சிலர் ஸ்ரீ அய்யாவாளிடம் தெரிவிக்க, அவர் வந்து ப்ரும்மேந்திராளின் காதில் ப்ரணவத்தை சொல்லி அவர் நிஷ்டையை கலைய வைத்தார். தன்னைச் சுற்றிய ப்ரகிருதியே மாறினும், ஸமாதி கலையாதவருக்கு இவ்வாறு சுலபமாய் ஸமாதி கலைய அய்யாவாள் உபாயம் பண்ணியது விந்தையே.

ப்ரும்மேந்திராளின் கல்வி காலத்திலேயே இருவருக்கும் பரிச்சயம் உண்டு என்பதால், இருவருக்கும் ஸ்நேஹம் உடன் ஏற்பட்டது. அய்யாவாள் ப்ரும்மேந்திரரை வீட்டிற்கு அழைத்துச் சென்று, உபசரித்து சிரமப்பரிஹாரம் செய்ய வைத்தார். ப்ரும்மேந்திராள் மௌனமாக இருப்பவர். மேலும் திகம்பரர். ஊரில் உள்ளே வாழ விருப்பமின்றி ஊருக்கு வெளியே இருந்து வந்தார். அய்யாவாள் ப்ரும்மேந்திரரிடம் கொண்ட அன்பைக் கண்டு, ஊரும் அப்படியே அவரை உபசரித்தது.

அய்யாவாளும், போதேந்திர ஸ்வாமிகளும் மிக நெருங்கிய நண்பர்கள். இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வது வழக்கம். இப்பொழுது, மூன்றாவதாக ப்ரும்மேந்திராளும் சேர்ந்தார். மூவரும் பகவத்விஷயமாய் விவாதிப்பது வழக்கம். ப்ரும்மேந்திராள் போதேந்திராளிடம் 'தாங்கள் ஆத்மசாக்ஷாத்காரத்தை பூரணமாய் அடைந்த மஹானாய் இருந்தும் நாமகீர்த்தனத்தை அவலம்பித்து

இருக்கிறீர்களே' என வினவினார். பதிலுக்கு போதேந்த்ராள், ''கலியில் பாமரன், ஸந்யாசி முதற்கொண்டு முக்தன், பக்தன் என்று அனைவருக்கும் பொதுவான தர்மமாக நாமகீர்த்தனம் விதிக்கப்பட்டிருக்கிறது'' என உரைத்தார்.

ப்ரும்மேந்திராளுக்கு அது ஏற்புடையதாக இல்லை. 'அந்நியமாக ஒரு பொருளும் இல்லாத நிலையை அடைந்த பிறகு யாரை பஜிப்பது' என வினவினார். போதேந்திராளும் சளைக்காமல், 'ஸனகாதி மஹாமுனிவர்கள் நித்யமுக்தர்களே. அப்படி இருப்பினும், அவர்கள் கோபப்பட்டு வைகுந்த வாசலில் ஜய, விஜயர்களுக்கு சாபமளிக்கும்படி நேர்ந்ததே. மேலும் சுகர் தங்களை ஒத்தவரே. பாகவதம் அவர் விருப்பமுடன் சொன்னாரே. அதுவே, தனது பிறவிப்பயன் எனவும் எண்ணினாரே என பல ஸம்பவங்களை மேற்கோள் காட்டவும் செய்தார். ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள், அச்சமயம், ''அத்வைதத்தில் வாதத்திற்கு இடமில்லை. ஆதலின் இந்த விவாதம் அனுபவத்தாலே தீர்க்கப்பட வேண்டியது'' என்றார். மூவரும் பிரிந்து சென்றனர்.

அன்றிரவு ப்ரும்மேந்திரர், ஒரு சிறு மணல் குவியலை தலைக்கு தலையணியாய் வைத்து படுத்து இருந்தார். வழிப்போக்கர்களாக அங்கு சென்ற இருவர், ''சாமியாருக்கு தலையணை தேவை பார்த்தாயா!'' என உரக்கப் பேசிச் சென்றனர். இது கேட்ட ப்ரும்மேந்திராள், தனது தலையணையை கலைத்து, சாதாரணமாக இருப்பது போலிருந்தார். மறுபடி திரும்பி வந்த அவர்கள், ''நாம் பேசியது இந்த சாமியாருக்கு எவ்வளவு ரோஷம் கொடுத்துவிட்டது பார். தலையணையை எடுத்து விட்டார். சாமியாருக்கும் ரோஷமா'' என்று பேசிக்கொண்டே சென்று விட்டனர். ''உலகோடு வாழ்வது அரிது'' என மிகவும் வருத்தப்பட்டார் ப்ரும்மேந்திரர். மறுநாள் காலை, அய்யாவாளிடம் சென்று கபடமின்றி இரவு நடந்ததை அப்படியே எழுதி காண்பித்துவிட்டார்.

அய்யாவாள் மிகவும் ஆச்சரியப்பட்டு, கை வெட்டுப்பட்டது தெரியாமல் இருந்தவர், ஜலம் கரைபுரண்டு அடித்துச் சென்றபோது

ஸமாதி கலையாது இருந்தவர், அத்தகையவருக்குக் கூட உலகத்தவர் பேசுவது ஒரு பொருட்டாக போயிற்றே. அதற்காக வருத்தமும் படும்படி ஆயிற்றே என்று ஈஶ்வரனின் லீலையை எண்ணி மேற்கண்ட அர்த்தம் பொருள்படும்படி ஸ்லோகம் பண்ணினார்.

இந்த ஸ்லோகத்தைக் கேட்டவுடன், ப்ரும்மேந்திராள் மாறிப் போய்விட்டார். தமக்கும் இப்படி ஒரு லோக ஸமாசாரத்தின் பொருட்டு அவதிப்படும்படி நேர்ந்ததே என வருத்தப்பட்டுக் கொண்டு இருந்தவர், அய்யாவாள் அதை பகவத்லீலையாக ஸ்லாகிக்கவே, இவருக்கும் அத்தகைய **பா**வம் நெருப்பு போல் பற்றியது. அவ்வளவுதான். வாக்குக்கும், மனதுக்கும் எட்டாத ப்ரும்மேந்திராளின் மனதை இந்த லீலையின் மூலம் தன்னுடைய ஸகுண ரூபத்தில் ஈடுபட வைத்தான் பகவான். ப்ரும்மேந்திராள் அதன் பின் பலகாலம் எப்பொழுதும் சிவ, ஹரி நாமங்களை பாடியபடியே இருப்பார். 'நடராஜரா'கவும் இருப்பது உண்டு. அப்பொழுது பகவந்நாமம் சொல்லிக்கொண்டே நர்த்தனம் செய்வார்.

ஸர்வேஶ்வரனுக்கு யாராவது தன்னை உளமார பாடிவிட்டால் பொறுக்காது. நேரே சென்று பார்த்துவிட வேண்டும். தன்னையேதான் பார்த்துக் கொண்டாலும், அழகுள்ளவனுக்கு அதில் திருப்தி இருக்கும். அல்லாவிடில் பரமேஶ்வரன் தன்னை நிலைக் கண்ணாடியில் பார்த்தபொழுது, 'சுந்தரா! வா!' என்று அழைத்து இருப்பானா?

ஒரு ஸமயம் ப்ரும்மேந்திரர் ஹரி நாமத்தை உரக்க கரத்தாளம் போட்டு பாடியவண்ணமிருக்கும்பொழுது, அதைக் காண அங்கு கண்ணன் வந்தான். அதாவது அவனை, அவர் தனக்கு வெளியிலும் கண்டார். அதன் பின் அவர் பாடிய பாட்டுகள் அதி அற்புதமாகவும், ஆச்சரியகரமாகவும் உள்ளன.

சங்கரரைப் போன்று காரியம் சாதித்தவர் இல்லை என்றே சொல்லிவிடலாம். ஆனால், அவர் செய்த காரியம் அனைத்தும் வ்யாஸருக்கே உரியது எனலாம். ஏனெனில், சங்கரரை திக்விஜயம் செய்ய வைத்தது, அவரது ஆயுளை நீடித்து, அவரை

ஷண்மதஸ்தாபனம் செய்யத் தூண்டியது, எல்லாம் வ்யாஸரே. எண்ணில் அடங்கா, அற்புதமான சங்கரரின் கீர்த்தனைகள் முதலில் வ்யாஸருக்கே உரியது. அதுபோல், ப்ரும்மேந்திராளின் அதி அற்புதமான கீர்த்தனைகள் பகவானை விட, முதலில் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீ அய்யாவாளுக்குமே உரியது. அவர்களால் அன்றோ இன்று இந்த கீர்த்தனைகளை பாமரரும் அனுபவிக்க முடிகிறது. ப்ரும்மேந்திரரின் ஸ்திதி அப்படிப்பட்டதாக இருக்கிறது.

பால் வடியும் முகம், கையில் வழியும் வெண்ணை, காலில் வழியும் தயிர் என்று அவனை பாடாத பக்தரில்லை. 'என்னத்தை சொன்னாலும், கண்ணன் பிள்ளைத்தனம் இன்சுவை மிகவாகுதே' என்கிறார் ஊத்துக்காடு வெங்கடசுப்பைய்யர். பொருள் பார்த்தால் இவன் செய்த அநேக அன்றாட காரியங்களே அழகு. உட்கார்ந்தது, தூங்கியது, உண்டது, பேசியது, நடந்தது என எதுவுமே அழகு என்கிறார்.

இவன் தோற்றம் சொல்லிற்கடங்குமா? இவனுடைய குண்டலங்களை பார்த்தவருக்கு மற்றொன்றில் பார்வை போகாது. கண்ணைப் பார்த்தவருக்கு, ஆனந்தம் கரைபுரளும். அவரிடம் மற்ற ஆனந்தங்களை பற்றி சொன்னால், மற்றவரை அவர் ரஸனையற்றவரே என்றே நினைப்பர். முகம், நெற்றி, கழுத்து, புஜம், மார்பு என்று பார்வையை ஓட்ட முடியாது. 'தோள் கண்டார், தோளே கண்டார்' என்று ராமனுக்கு சொல்வது போல்தான் இங்கும்.

குண்டலமே ஒருவரின் மொத்த மனத்தையும் அபஹரிக்குமென்றால் பீதாம்பரத்தை என்னவென்று சொல்வது. அதுவும் அழகு. அவன் உடுத்துவதும் அழகு. உடுத்திய அழகை பார்ப்பதா? அந்த வர்ணத்தில் லயிப்பதா? இவன் தனியாக வந்தாலே யாரையும் வெல்வான். கூட ராதை வேறு. அவர்களுடன் கோபிகைகளும் வந்தனர். அவர்கள் நடந்து வருவதால் வரும் அரவம் கூட அல்லவா, ஒருவனது மனதை அழிக்கும் சக்தி வாய்ந்தது. இத்தனை அழகையும் கூட ஓரம் கட்டும்படி தலையில்

மயில்பீலி. அதுவும் அழகு. அது அசைவதும் அழகு. இவனைப் பார்த்தவர்கள் நாலுகை மஹாவிஷ்ணுவுக்கு அழகு போறாது என்றுதான் சொல்லவேணும். அதனால்தான் ருத்ரன் கைலாஸத்தை விட்டு, வைகுந்தம் போகாது, ப்ருந்தாவனம் வந்தார். அப்பா வழி, மகனான முருகனும் விளையாட வந்ததாக சொல்வதுமுண்டு. பன்னிருகைகள், இரு கைகளோடு விளையாடுமாம். எஜமானனே தனது வேலைகளை மறந்து வருவதால் அந்த மயிலும் அப்படியே அடிக்கடி வந்து அழகு காட்டிச் செல்லும். இப்படி ஒவ்வொரு அவலமும், விஷயமும் மயக்கும் விதமாய் இருந்த கண்ணனை சங்கரர் போன்ற மஹாத்மாக்களும், அவர்கள் வழியில் ப்ரும்மேந்திரரும் முழுதும் வர்ணித்து பாடியது விந்தை. கண்ணன் அவர்களுக்கு அகப்பட்டான் எனலாம். அல்லது மஹாத்மாக்களுக்கு அகப்படாதது எதுவும் இல்லை எனலாம்.

எல்லோரையும் மயக்கி பழக்கப்பட்ட கண்ணன், ப்ரும்மேந்திராளிடம் வந்தான். யார், யாரிடம் மயங்கினார் என்பது தெரியவில்லை. ஆனால், ப்ரும்மேந்திரர் ஒரு பாடலில், ''மனமே! நீ ப்ரும்மமாகிய மயில்பலீ வைத்திருக்கும் கிருஷ்ணனை நாடு. அவனையே தியானம் செய்'' என்கிறார். பிறிதொரு இடத்தில், கண்ணனை தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் சகோர பக்ஷியாக சொல்கிறார். அந்த பக்ஷி சந்திரனைப் பார்த்தவாறு கூவிக்கொண்டே இருக்கும். இங்கு, கண்ணன் தன்னிடம் அப்படி இருப்பதாகச் சொல்கிறார்.

''உனக்கு இரண்டு பெண்டாட்டி உண்டு அல்லவா. எனக்கும் இரண்டாவது கல்யாணம் செய்து கொடு'' என்று பரமேஶ்வரனிடம் பேசுகிறார் சுந்தரர். மேலும் அவனை 'பித்தன்' என்கிறார். எனக்கு அனுக்ரஹம் செய்யாவிடில் உன்மேல் உலகத்தவர் சுமத்தும் பழி, நட்ட தூண் போல் இருக்கும் அருணாசலா! என்கிறார் ரமண மஹரிஷிகள். காளிதாசன், அம்பிகை தன்னுடன் வந்தவரைப் பற்றி சொல்லிவிட்டு, தன்னைப்பற்றி ஏதும் சொல்லாதிருப்பது கண்டு வெகுண்டு, நான் யாரடி? என்று ஒருமையிலே கேட்கிறான். பரமேஶ்வரன் கூட அப்படி கூப்பிடுவாரா என தெரியவில்லை.

‘தந்தது உன்தனை, கொண்டது எந்தனை, ஆர்கொலோ சதுரர்’ என்று மணிவாசகர் ஈஶ்வரனை விட தானே சாமர்த்தியசாலி என்கிறார்.

அன்பின் மிகுதியால் பல பெரியோர்கள் இப்படி இறைவனை சொல்லியதுண்டு. இருப்பினும், ப்ரும்மேந்திராளோ ப்ரும்மநிஷ்டர். ஸகல லோகத்திலும் அவருக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அப்படி இருக்கும் ஒருவர் க்ருஷ்ண பக்தராய் இருப்பது க்ருஷ்ணனுக்குதானே பெருமை? அவனும் ப்ரும்மேந்திராளை நோக்கியவாறே இருந்தான் என்பது மேற்கூறிய காரணத்தால் மேலும் தெளிவாகிறது. ப்ரும்மேந்திராளின் கீர்த்தனைகள் மிக்க பிரசித்தி. சாதுக்களின் சரித்திரம் இனிப்பும், மருந்துமாவது. அவர்களின் கீர்த்தனைகளும் அப்படியே.

சுந்தரர் கைலாஸம் சென்றபொழுது பரமேஶ்வரனின் ஐராவதம் வந்ததாம். அந்த ஐராவதம் கைலாஸம் சேருமுன், சேரமான் பெருமாள் நாயனார் (சுந்தரரின் தோழர்) தனது குதிரையில் சென்றாராம். ஸ்வாமி துக்காராம் இந்த ஸ்தூல சரீரத்துடனேயே, கருடவாஹனத்தில் வைகுந்தம் சென்றதை பலரும் பார்த்தனர். அவர் சென்ற பிறகு, அவர் பேரன் சொல்ல, (பல வருடம் கழித்து) ஒரு சபையில் பலர் முன்னிலையில், அவருடைய தம்புராவும் ‘விட்டல’ நாதமோடு அல்லவா வைகுந்தம் சென்றது. எதிலும் அடியவர் சரித்திரம் அற்புதங்களடங்கியவையே. ப்ரும்மேந்திராளும் மானாமதுரை, கராச்சி, நெரூர் எனும் மூன்று ஊர் ஜனங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மூவிடத்தில் தமது ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண தேகங்களை ஸமாதியில் வைத்தார் என இவர் வரலாறு கூறுகிறது.

பகவானின் அவதாரங்களில் உயர்வு, தாழ்வு இல்லை. தெய்வங்களுள் நடராஜனும், பகவதவதாரங்களுள் ஈஶ்வரனாய் இருந்தும் சிறிதும் அதை வெளிக்காட்டாது மானுடன் போலவே வாழ்ந்த ராமனும், அர்ச்சாவதாரங்களுள் ரங்கநாதனும், குருநாதர்களில் சங்கரரும் எவ்வாறு பெரியோரால் சிறப்பாக சிலாகித்து பேசப்படுகின்றனரோ அதுபோல் தனது பக்திக்காக கண்ணன் ஏங்குகிறான் என பாடிய ப்ரும்மேந்திரரின் சரிதம், ப்ரும்மநிஷ்டர்களின் சரித்திரங்களில் மிகவும் சிலாகிக்கப்படுகிறது.

# மஹாபாரத கதைகள்

— **நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

தமயந்தியின் ஆடையிலிருந்து பாதி கிழித்து எடுத்துக்கொண்டு காட்டில் தமயந்தியை தனியாக விட்டு நளன் வெளியேறினான். ராமன் ஸீதையை காட்டில் விடச் சொல்லும்பொழுது எத்தகைய துக்கம் அடைந்தானோ, அரிச்சந்திரன் தன் மகனுடைய பிரேத சடங்கிற்கு தனது மனைவியிடமே கூலி கேட்டதற்கு எப்படி வருந்தினானோ அதற்கு ஒப்பான துக்கமடைந்தான். நளன் சிறிது தூரம் சென்றதும், விழித்து எழுந்த தமயந்தி நளன் அடைந்ததற்கும் மேலான துக்கம் அடைந்தாள்.

ராமன் சீதையை காட்டில் பிரிந்து அலைந்தபொழுது எப்படி செடி, கொடிகளையும் கூட சீதை எங்கே, சீதை எங்கே என்று கேட்டு துன்பப்பட்டு போனானோ, அதுபோல் தமயந்தியும் வாய்விட்டு அரற்றினாள். நளன் அடைந்த துன்பத்தைவிட தமயந்தி அடைந்த துன்பமே அதிகம். தமயந்திக்கு இந்த துன்பத்தை கொடுத்ததால்தான் கலி பின்னால் பரம துக்கமடைந்தான்.

ராவணன் கொடுங்கோலனாய் அரசாட்சி செய்து வரும்பொழுது, எத்தகைய துன்பத்தையும் பெரிதாக அடையவில்லை. அவனுக்கு அழிவே இல்லையோ என்று பலரும், தேவரும் விரும்பும் ஸமயத்தில் கூட ஏக, போகமாய் வாழ்ந்தான். பல ஸ்திரீகளை அவன் அலைக்கழித்தபொழுது அவன் காலம் அழியவில்லை. ஸீதையை தூக்கி வந்து அவன் ராமனுக்கு ஒருநாள் துன்பம் தீராது கொடுத்தான். அன்றே அவன் அழிந்து போனான். தருமமே பற்றாக வாழ்பவர்களான நளனையும், தமயந்தியும் தனக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை மீறி கலி அநீதி இழைத்ததால், எல்லோர்க்கும் துன்பம் கொடுக்கும் கலி துன்பப்பட்டான்.

காட்டில் நளனை பற்றி பேசி, அரற்றிக் கொண்டிருந்த தமயந்தியை ஒரு பெரிய மலைப்பாம்பு அவளை பிடித்து விழுங்க ஆரம்பித்தது. ஸீதையை தொலைத்த ராமனுக்கு அடுத்தடுத்து ஆபத்துகள் வந்தது போல் விராதனையும், அசமுக்யையும் அவன் அழித்தானல்லவா? பாவம், தமயந்தி என்ன செய்ய முடியும்

மலைப்பாம்பை? தனது உயிர்போகும் நிலையில்கூட தமயந்தி, கற்புடைய மாதரின் செய்கைக்கு ஒப்ப, தனது கணவனின் க்ஷேமத்துக்கே கவலைப்பட்டாள். நளராஜரே! எங்கு சென்றீர்? உம்மை எவனாவது தீங்கிழைத்து சென்றானோ! என்றெல்லாம் அப்பொழுதும் பேசிக்கொண்டிருந்தாள்.

அந்த காட்டில் வேட்டைக்கு வந்திருந்த வேடனுக்கு, இவளுடைய கூக்குரல் கேட்டது. அதுகேட்டு வந்த வேடன், அந்த மலைப்பாம்பை கொன்று தமயந்தியை விடுவித்தான். பசுவை கொடுமையாக நடத்தும் ஒருவன், கசாப்புக்கடைகாரனுக்கு அதை விற்றது போலாயிற்று. அது அந்த வேடன் தமயந்தி மேல் தவறான எண்ணம் கொண்டவனாய் இருந்தான். கற்புடைய மாதருக்கு கற்பே ஆயுதம் அல்லவா?

பத்து மாதங்கள் அசோக வனத்திலிருந்த ஸீதைக்கு, லோகபாலர்களையே அடிபணிய வைத்த ராவணனால் என்ன தீங்கிழைக்க முடிந்தது? அவனால் மிரட்ட மட்டுமே முடிந்தது. அவன் வேறு துன்பம் விளைவிக்க எண்ணியிருந்தால், ப்ரும்மா அவனுக்கு கொடுத்த சாபம் தேவையில்லை. சீதையினாலேயே அவன் உயிர் போயிருக்குமல்லவா?

தமயந்தி விஷயத்தில் அப்படியே நடந்தது. தன்னை தவறான எண்ணத்துடன் நெருங்கிய வேடனைப் பார்த்து, நெருப்பென விழித்து, தமயந்தி ''இவன் பிணமாகட்டும்'' என்று சபித்தாள். கயிலையை தன்பலம் கொண்டு ராவணன் பெயர்த்த பொழுது மகாதேவர் தன் கால்நகத்தால் சற்றே மலையை அமுக்க தனது சகலபலமும் அற்று தவித்து ஆடிப்போன ராவணன் போல், அந்த வேடனும் அந்த க்ஷணமே உயிரற்றவன் ஆனான்.

தமயந்தி மேற்கொண்டு பலவாறு காட்டில் அலைந்தாள். சிங்கம், புலி, பாம்பு, காட்டெருமை, கரடி போன்ற மிருகங்களின் சஞ்சாரம் தமயந்தியை அச்சுறுத்தவில்லை. பர்த்தாவை இழந்ததின் துக்கம் அப்படி இருந்தது அவளுக்கு தமயந்தியை வேறு எந்த ஆபத்தும் நெருங்கவில்லை. ஆனால் அவள் மனக்லேசம் நீங்கவில்லை. தேவராஜன் அந்த மனக்லேசம் குறைய ஒரு ஏற்பாடு செய்தான்.

(தொடரும்)

# செய்திகள்

### பிப்ரவரி 19-ந் தேதி – ஏகாதஶீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஶியை முன்னிட்டு திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது.

### பிப்ரவரி 20-ந் தேதி

பகவான் யோகிராம் சுரத்குமார் அவர்கள் ஸித்தியடைந்ததை முன்னிட்டு சென்னை ப்ரேமிகபவனத்தில் அகண்ட ''ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இரவு 8 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகள் யோகியைப் பற்றியும் மஹான்களைப் பற்றியும் பேசினார்கள்.

### பிப்ரவரி 21-ந் தேதி

மஹா சிவராத்ரியை முன்னிட்டு வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்த்ராள் அதிஷ்டானத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளால் ஐந்துகால அபிஷேக ஆராதனை நடைபெற்றன.

### பிப்ரவரி 24-ந் தேதி

சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், ஸ்ரீநிவாஸா அவென்யு, நெ. 13ல், ஆண்டவன் பிச்சை பஜனை மண்டலியின் 19வது ஆண்டு விழாவில் மாலை 7 மணியளவில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள். இரவு 8.30 மணி முதல் 12 மணி வரை சென்னை அடையாறு, சாஸ்திரி நகர் விஜயராஜா கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திவ்யநாம ஸங்கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### பிப்ரவரி 26-ந் தேதி முதல் மார்ச் 4-ந் தேதி

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் சென்னை R.R. சபாவில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ''ஹரே ராம'' அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.